# TNPSC Tamil Current Affairs 29th March 2017

1. ஐ. நா வின் World Food Programme (WFP)க்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாக இயக்குநர் யார் ?

A. David Beasley
B. Nikki Haley
C. Josette Sheeran
D. James Morris

விடை : A. David Beasley

David Beasley, தென் கரோலினாவின் முன்னாள் ஆளுநராவார். இனி இவர் ஐ.நா வின் World Food Programme (WFP)க்கு நிர்வாக இயக்குனராக செயல்படுவார். இவருக்கு முன் இப்பதவியில் Ertharin Cousin என்பவர் 2012 முதல் செயல்பட்டு வந்தார். WPF என்பது உலகின் மிகப்பெரிய மனிதாபிமான அடிப்படையில் இயங்கிவரும் ஓர் அமைப்பாகும். இதன் தலைமைச்செயலகம் ரோம்,இத்தாலியில் உள்ளது. இது சராசரியாக உலகின் 75 நாடுகளிலுள்ள 80 மில்லியன் மக்களுக்கான உணவுத்தேவையை பூர்த்தி செய்கிறது.

2. True caller நிறுவனம் எந்த வங்கியுடன் இணைந்து ஒருங்கிணைந்த பணம் செலுத்தும் செயலியான “True Caller Pay” வை வெளியிடுவதாக கூறியுள்ளது?

A. HDFC Bank

B. ICICI Bank

C. State Bank of India

D. Axis Bank

விடை : B. ICICI Bank

True Caller நிறுவனம் தனது இந்திய பயனாளிகள் பயன்பெறும் விதமாக ICICI வங்கியுடன் இணைந்து, ஒருங்கிணைந்த பணம் செலுத்தும் இடைமுகமான (Unified Payment Interface-UPI based) “True Caller Pay” வை அறிமுகப்படுத்தவுள்ளது. இதன் மூலம் பயனாளிகள் தங்களுக்கென ஒரு Virtual Payment Address-ஐ உருவாக்கி,அதனைக்கொண்டு UPI வசதி உள்ள அனைத்து வங்கிகளுடனும் பணப்பரிவர்த்தனை செய்துகொள்ளலாம்.ஏற்கனவே BHIM செயலியில் பதிவு செய்துள்ளவர்களும் இதனை பயன்படுத்தலாம்.இது பணப்பரிவர்த்தனைக்கு மட்டுமல்லாமல் ரீசார்ஜ் செய்வதற்கும், தொலைபேசி கட்டணம் செலுத்துவதற்கும் பயன்படுத்தலாம். ICICI வங்கிப்பயனாளிகளாக அல்லாதவரும் இதனை பயன்படுத்தலாம்.

3. 2016க்கான “சிறந்த சிறிய வங்கி” “Best Small Bank” விருது பெற்ற வங்கி எது?

A. Bandhan Bank

B. IDBI Bank

C. Karur Vysya Bank

D.Dena Bank

விடை : C. Karur Vysya Bank

2016க்கான “சிறந்த சிறிய வங்கி” “Best Small Bank” விருதை Karur Vysya Bank பெற்றுள்ளது (1 லட்சம் கோடிக்குக்கும் குறைவான Balance Sheet). இதனை இவ்வங்கியின் மேலாண் இயக்குநர் திரு.K.வெங்கடராமன், மகாராஷ்டிரா மாநில நிதியமைச்சர் திரு. சுதிர் முன்குந்திவர் கரங்களினால் பெற்றுக்கொண்டார். இது KVB யின் 8வது நிதிக்காக பெறும் விருதாகும்.

4.ஹாங்காங்கின் சிறப்பு நிர்வாக பகுதியின் (Special Administrative Region) முதல் பெண் முதன்மை இயக்குநர் (Chief Executive) யார்?

A. Woo Kwok-hing

B. Leung Chun-ying

C. Eric Cheung

D. Carrie Lam

விடை : D. Carrie Lam

இவர் பூஜிங்கைசேர்ந்த சமூகப்பணியாளர் ஆவார். இதற்கு முன் இப்பதவியில் Leung Chun-ying இருந்தார். Jul 1 2017 முதல் Carrie Lam இப்பதவியில் பணியாற்றுவார். இப்பதவி ஹாங்காங் அரசின் தலைமைப்பதவியாகும்.

5.2017க்கான “Border Gavaskar Trophy” ல் “Man of the Series” பட்டம் வென்றவர் யார்?

A. Ravichandran Ashwin

B. Ajinkya Rahane

C. Ravindra Jadeja

D. Murali Vijay

விடை : C. Ravindra Jadeja

2017க்கான “Border Gavaskar Trophy” இமாச்சலத்தில் நடைபெற்றது. இதில் 4வது மற்றும் இறுதிப்போட்டியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவை 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இந்தப்போட்டியில் Ravindra Jadeja “Man of the Series” பட்டம் வென்றார்.

6. எந்த இந்திய கிரிக்கெட் வீரர் 2016க்கான Sir Garfield Sober Trophy யை வென்றார்?

A. Virat Kohli

B. Ravichandra Ashwin

C. Ajinkya Rahane

D. Ravindra Jadeja

விடை : B. Ravichandra Ashwin

இவர் இந்த விருதுடன் “ ICC Test Cricketer of the Year 2016”-ஐ இந்திய கிரிக்கெட் அணியின் முன்னால் தலைவர்களான கபில் தேவ் & சுனில் கவாஸ்கர் ஆகியோரின் கைகளினால்

பெற்றுக்கொண்டார்.இதனால் ராகுல் டிராவிட், சச்சினுக்குப்பிறகு, Sir Garfield Sober Trophy யை பெறும் 3வது இந்தியர் எனும் பெருமையையும் கொண்டுள்ளார். ட்ராவிட்டுக்கு பிறகு ஒரே வருடத்தில் 2 விருது வாங்குபவர் இவரே. இது முதன் முதலில் 2004 ல் டிராவிட்டுக்கு வழங்கப்பட்டது.

7.எந்த மத்திய அமைச்சகம் இணைய வழி திரைப்படச்சான்றிதழ் வழங்கும் சேவையான (Online Film Certification System) "e-Cinepramaan"ஐ வெளிப்படைத்தன்மைக்காகவும், எளிமையான வியாபார நோக்கிற்காகவும் அறிமுகப்படுத்தியுள்ளது?

A. Ministry of Science and Technology

B. Ministry of Information and Broadcasting

C. Ministry of Communications

D. Ministry of Electronics and Information Technology

விடை : B. Ministry of Information and Broadcasting

இதனை அறிமுகப்படுத்தியவர் மத்திய தகவல் & ஒளிபரப்புத்துறை அமைச்சர் திரு. வெங்கையா நாயுடு ஆவார். இது இடைத்தரகர்கள் மற்றும் முடிந்தவரை நேரிடை ஆட்களை தவிர்ப்பதற்கான முயற்சியாகும்.இதன் மூலம் வெகுவான திரைப்படம் சார்ந்த ஊழல்கள் குறையும்.

8. 2017க்கான Glen Fiddich's Emerging Artist ஆக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Sitaram Swain

B. Sunil Sethi

C. Peter Nagy

D. Feroz Gujral

விடை : A. Sitaram Swain

இவர் ஒடிசாவைச்சேர்ந்தவர். இந்தியாவின் சார்பாக ஸ்காட்லாந்திலுள்ள Glen Fiddich's Distilleryல் 3 மாதங்கள் பணிபுரிவார்.அதோடு இவருக்கு 10 லட்சம் பணப்பரிசு(வெளிநாட்டு செலவுகளுக்காக 1,20,000 மும் பணிசெலவுக்காக 5,00,000 மும் உட்பட) வழங்கப்பட்டது.

9. சமீபத்தில் கலைமான திரு. அருண் சர்மா, எந்தத்துறையைச்சார்ந்தவர்?

A. Law

B. Science

C. Sports

D. Literary

விடை : D. Literary

டெல்லியில் காலமான 86 வயதான இவர், அசாமின் சிறந்த சாகித்ய அகாடமி விருதுபெற்ற நாவலாசிரியர் ஆவார். இவர் பத்ம ஸ்ரீ, சாகித்யா அகாடமி,Assam Valley Literary Award போன்ற பல விருதுகளை பெற்றுள்ளார்.

10. Sports Authority of India(SAI)வில் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர் யார்?

A. Vijender Singh

B. Sania Mirza

C. Siddhartha Upadhyay

D. Sachin Tendulkar

விடை : C. Siddhartha Upadhyay

இவர் விளையாட்டு தொழில் முனைவோர் மற்றும் கொடையாளர் ஆவார்.இவர் STAIRS(Society for Transformation, Inclusion, and Recognition through Sports) ன் நிறுவனர் மற்றும் பொதுச்செயலர் ஆவார். இது ஒரு வியாபார நோக்கற்ற குழந்தைகளுக்கான கல்வி,விளையாட்டு,ஆரோக்கியம் மற்றும் திறன் வளர்ச்சிக்கான நிறுவனமாகும். இந்நிறுவனம் ககன் நரங்( துப்பாக்கிச்சூடு), அஸ்வனி நாச்சப்பா,ஷைனி வில்சன்(தடகளம்) போன்ற சில முக்கிய விளையாட்டுத்துறையைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கியது